# IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.

## OS. No. 149/2021

| | | | |
|---|---|---|---|
| | | DEPOSITION OF WITNESS | PW.1 |
| NAME | தாமரைசெல்வன் | TALUK | குடியாத்தம் |
| FATHER NAME | கமலநாதன் | RELIGION | இந்து |
| AGE | | OCCUPATION | |
| VILLAGE | மேல்முட்டுகூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 23.10.2025.

**1ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

1. எதற்காக வழக்கு போட்டுள்ளேன் என்றால் பாகம் கேட்டு வழக்கு போட்டுள்ளேன். 15 பாகமாக தாவா சொத்தை பிரித்து அதில் ஒரு பாகம் கேட்டு வழக்கு போட்டுள்ளேன். வழக்கில் 1ஆம் பிரதிவாதி எனது அப்பா என்றால் சரிதான். 2ஆம் பிரதிவாதி எனது அப்பாவின் சகோதரர் என்றால் சரிதான். 3ஆம் பிரதிவாதி யசோதா எனது அப்பாவின் தங்கை என்றால் சரிதான். 4ஆம் பிரதிவாதி சேட்டம்மாள் எனது அப்பாவின் தங்கை. 5ஆம் பிரதிவாதி முனியம்மாள் எனது அப்பாவின் அம்மா என்றால் சரிதான். 1 முதல் 5 பிரதிவாதிகள் உயிரோடு உள்ளார்கள் என்றால் சரிதான்.

2. 1 முதல் 5 பிரதிவாதிகளில் 4ஆம் பிரதிவாதி சேட்டு அம்மாளை தவிர மற்றவர்கள் தாவா சொத்தில் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். சேட்டு அம்மாள் அதே ஊரில் திருமணம் செய்துகொண்டு நிலத்திடம் வந்து போய்கொண்டிருக்கிறார் என்றால் சரிதான். நான் காக்காத்தோப்பில் நிரந்தரமாக வசித்து வருகிறேன் என்றால் சரிதான். நான் தாவா சொத்திற்கு சென்றுவருவது இல்லை என்றால் சரிதான். 1 முதல் 5 பிரதிவாதிகள் தான் தாவா சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

3. 6ஆம் பிரதிவாதி தாவா சொத்தில் அனுபவத்தில் இல்லை என்றால் சரிதான். அவர் எப்போதும் தாவா சொத்திற்கு சென்று வருவதில்லை என்றால் சரிதான். தாவா அயிட்டம் 1 மற்றும் 2 சொத்துக்கள் சாமி கவுண்டர் மற்றும் வெள்ளக்கண்ண கவுண்டர் இருவருக்கும் தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்டு அவர்கள் இருவரும் ஆவணங்கள் ஏற்படுத்திக்கொண்டு அதன்படி அனுபவித்து வந்தார்கள் என்றால் ஆமாம். அவர்கள் உயிரோடு இருந்தபோது சொத்துக்களை சாமிகவுண்டர் தான் சுயராஜ்ஜிதமாக பாத்தியப்பட்ட வகையில் அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். சாமி

கவுண்டர் அவருக்கு வந்த சம்பாத்தியத்தை கொண்டு அயிட்டம் 3 மற்றும் 4 தாவா சொத்துக்களை சுயராஜ்ஜிதமாக கிரயம் பெற்றார் என்றால் சரிதான். அதனால் தாவா சொத்துக்கள் அனைத்தும் சாமி கவுண்டருக்கு சுயராஜ்ஜிதமாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் ஆமாம்.

4. சாமி கவுண்டர் எப்போது இறந்தார் என்றால் எனக்கு தெரியாது. அவரது இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது அப்பாவிற்கு எந்த வருடம் எந்த தேதியில் திருமணம் ஆனது என்றால் தெரியாது. நான் 23.03.1993–ல் பிறந்தேன். எனது அம்மா பெயர் ஜெயந்தி என்றால் சரிதான். எனது அம்மா எனது அப்பாவிடம் இருந்து பிரிந்து சென்றபோது எனக்கு ஆறு வயதிருக்கும். அதுவரை நான் எனது அம்மாவின் அம்மா வீட்டில் வசித்து வந்தேன். அந்த வீட்டின் முகவரி 818, மேல்பட்டி ரோடு, உள்ளி கூட்ரோடு, குடியாத்தம். தற்போது வரை அந்த முகவரியில் தான் எனக்கு நினைவு தெரிந்தது முதல் வசித்து வருகிறேன் என்றால் சரிதான்.

5. 6ஆம் பிரதிவாதி எனக்கு என்ன உறவு என்றால் தங்கை உறவு. அவர் தற்போது எங்கு வசிக்கிறார் என்றால் முகவரி தெரியாது காக்காதோப்பில் வசிக்கிறார். அவரது பிறந்த தேதி எனக்கு தெரியாது. நான் பிறந்து எட்டு வருடம் கழித்து அவர் பிறந்தார். நான் எனது அம்மா மற்றும் 6ஆம் பிரதிவாதி எனது தங்கை ஆகியோர் மேற்படி மேல்பட்டி ரோட்டிலுள்ள வீட்டில் வசித்து வந்தோம் என்றால் சரிதான். எனது அம்மாவின் கையொப்பம் எனக்கு தெரியும். எனக்கு எழுத, படிக்க தெரியும்.

6. என்னிடம் காட்டப்படும் 26.04.1999 தேதியிட்ட ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடைய அம்மாவுடையதா என்றால் சரிதான். அதற்கு கீழே உள்ள கையெழுத்து என்னுடைய அப்பா கமலநாதனுடையது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் எனது அப்பா மற்றும் அம்மா பிரிந்து செல்லும்போது எழுதிக்கொண்ட ஆவணம் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த ஆவணத்தில் எனது அம்மாவும், அப்பாவும் பிரிந்து செல்வதாகவும் ஜீவனம்சமாக 15,000/– பணம் பெற்றதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், நேரடியாக எனக்கு தெரியாது. அந்த ஆவணத்தின் படி எனது அப்பாவும், அம்மாவும் பிரிந்த பிறகு சேர்ந்து வாழவில்லை என்றால் சரிதான்.

7. அந்த ஆவணத்தின் படி எனது அப்பா கமலநாதனுக்கு எனது அம்மா ஜெயந்திக்கும் நான் மட்டும் தான் பிள்ளை என அதில் எழுதப்பட்டுள்ளது என்றால் அந்த ஆவணம் எழுதப்பட்டபோது எனது அம்மா மூன்று மாதம் கர்ப்பிணியாக இருந்தார். அப்படி கர்ப்பம் அடைந்திருந்தால் அதுபற்றி அதில்

குறிப்பிட்டிருப்பார்கள் என்றால் எனது அம்மா எனது அப்பா வீட்டிலிருந்து எனது பாட்டி வீட்டிற்கு வந்த பிறகு தான் அந்த விவரம் தெரியவந்தது. எனது அம்மா அதுபோல் கருவுற்று இல்லை என்றாலும் 6ஆம் பிரதிவாதி 1ஆம் பிரதிவாதியின் வாரிசு இல்லை என்றாலும் நான் தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 6ஆம் பிரதிவாதிக்கு திருமணம் ஆகும்வரை நானும், 6ஆம் பிரதிவாதியும் ஒன்றாக தான் வசித்து வந்தோம் என்றால் சரிதான்.

8. 6ஆம் பிரதிவாதி 10வது வரை படித்துள்ளார். 6ஆம் பிரதிவாதியின் பிறந்ததேதி அவரது படிப்பு சான்றிதழை தாக்கல் செய்தால் தெரியவரும் என்றால் படிப்பு சான்று என்னிடம் உள்ளது. அதை தாக்கல் செய்கிறேனா என்றால் தாக்கல் செய்கிறேன். படிப்பு சான்றிதழை தாக்கல் செய்தால் அவரது தாய் தந்தை மற்றும் பிறந்த தேதி பற்றிய விவரம் நீதிமன்றத்திற்கு தெரியவரும் என்றால் சரிதான். 6ஆம் பிரதிவாதி 1ஆம் பிரதிவாதிக்கு முறைப்படி பிறந்தவர் இல்லை என்றால் சரியல்ல.

9. 1ஆம் பிரதிவாதி 12 வருடங்களுக்கு முன்பு வசந்தி என்பவரை இரண்டாவது திருமணம் செய்து கொண்டார் என்றால் எனது அப்பா இருக்கும் இடத்திற்கு நான் செல்லாததால் எனக்கு அதுபற்றி தெரியாது. வசந்தி என்பவருக்கு வினோதினி என்ற 10 வயது மகளும், விக்னேஸ்வரன் என்ற 6 வயது மகனும் உள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. அவர்கள் எல்லோரும் தாவா சொத்தில் கூட்டாக வசிக்கிறார்கள் என்றால் சரிதான். வினோதினி மற்றும் விக்னேஸ்வரன் ஆகியோர் இந்த வழக்கிற்கு தேவையான தரப்பினர்கள் என்றாலும் அவர்களை இந்த வழக்கில் நான் சேர்க்கவில்லை என்றால் எனது அப்பாவிற்கு திருமணம் நடந்து குழந்தைகள் உள்ள விவரம் எனக்கு தெரியாது. எனது அப்பாவிற்கு இரண்டாவது திருமணம் நடந்த விவரமும் அவருக்கு குழந்தைகள் உள்ள விவரமும் அவர்கள் தாவா சொத்தில் வசித்து வரும் விவரமும் எனக்கு தெரியும் என்றாலும் தெரிந்தே அந்த விவரத்தை மறைத்து வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

10. எனது அப்பா தாக்கல் செய்த பதிலுரையில் மேற்படி விவரத்தை குறிப்பிட்டுள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 1ஆம் பிரதிவாதி பதிலுரையில் மேற்படி விவரங்களை சொல்லியுள்ளார் என்றாலும் அதன் பின்பும் அவர்களை தரப்பினராக சேர்க்காமல் வழக்கை நடத்துவது ஏற்புடையதல்ல என்றால் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் 7வது பத்தியில் 1ஆம் பிரதிவாதி அவருடைய பதிலுரையில் பத்தி–8 மற்றும் பத்தி–9ல் குறிப்பிட்டுள்ள அனைத்து சங்கதிகளையும் நான் மறுக்கின்றேன், என்னுடைய தந்தையான 1–ஆம் பிரதிவாதிக்கு நானும், 6–ஆம் பிரதிவாதி மட்டும் தான் சட்டபூர்வ

வாரிசுகள் ஆவோம், இந்த வழக்கிலிருந்து என்னை ஏமாற்ற வேண்டியே 1–ஆம் பிரதிவாதி அவருக்கு என்னையும் 6–ஆம் பிரதிவாதியை தவிர மற்ற வாரிசுகள் இருப்பதாக குறிப்பிட்டுள்ளதை நான் மறுக்கின்றேன் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

11. நான் இருக்கும் இடத்திற்கும் எனது அப்பா 1ஆம் பிரதிவாதி உள்ள இடத்திற்கும் சுமார் 6 கிலோமீட்டர் தூரம் இருக்கும். 1ஆம் பிரதிவாதி பதிலுரை தாக்கல் செய்த பிறகு விசாரித்து 1ஆம் பிரதிவாதிக்கு இரண்டாவது திருமணமானது என்ற விவரத்தையும் குழந்தைகள் உள்ளார்களா என்ற விவரத்தையும் நான் விசாரித்து தெரிந்துகொள்ளவில்லை என்றால் சரிதான். 1ஆம் பிரதிவாதிக்கு இரண்டாவது திருமணமாகி குழந்தைகள் உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியும் என்றாலும் வழக்கிற்காக தெரியாது என்றும் வாரிசுகள் இல்லை என்றும் முரணாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல, எனக்கு தெரியாது.

12. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே 1ஆம் பிரதிவாதியின் வாரிசுகளை தரப்பினராக சேர்த்து இந்த வழக்கை தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றாலும் தேவையான தரப்பினரை சேர்க்காததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. தாவா 1 முதல் 4 அயிட்ட சொத்துக்கள் சுயராஜ்ஜிதமாக சாமி கவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்றாலும் அவர் இறந்தபிறகு 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு சுயராஜ்ஜிதமாக பாத்தியப்பட்டு அவர்கள் தனிப்பட்ட வகையில் அனுபவித்து வரும் சொத்துக்கள் என்றால் சரிதான். தனிப்பட்ட வகையில் அவர்கள் அனுபவித்து வருவதால் நான் பாகம் கேட்க முடியாது என்றால் சரியல்ல, அது தாத்தா சொத்து.

13. வழக்கில் தாவா சொத்து மூதாதையர் சொத்து என சொல்லி நான் பாகம் கேட்பது தவறு என்றால் சரியல்ல. எனது தந்தை சுயராஜ்ஜிதமாக பாத்தியப்பட்டு அனுபவித்து வரும் சொத்தில் நான் பாகம் கேட்க முடியாது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் நான் அனுபவத்தில் இல்லாததால் நீதிமன்ற கட்டண சட்டம் 37(2) –ன் கீழ் நான் பரிகாரம் கேட்க எனக்கு அருகதையில்லை என்றால் சரியல்ல. உண்மை சங்கதிகளை மறைத்து சொத்தை அடைய வேண்டும் என்ற எண்ணத்தில் தவறான சங்கதிகளை சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

14. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு பாகம் கேட்டு பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். நேரடியாக இந்த வழக்கை தாக்கல் செய்ய எனக்கு வழக்குமூலம் இல்லை என்றாலும் நான் பிரதிவாதிகளிடம் பாகம் கேட்டதாக வழக்கிற்காக பொய்யாக

சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கை தாக்கல் செய்து பாகம்கோர எனக்கு எந்த உரிமையும் இல்லாததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. இந்த வழக்கை நானும் 6ஆம் பிரதிவாதியும் கூட்டு சேர்ந்து தவறான சங்கதிகளை சொல்லி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

K KARTHICK ASATH — Digitally signed by K KARTHICK ASATH

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குடியாத்தம்.